1983 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணியாளர்களைப் பொறுத்தவரை யிலும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கான பணியாளர்கள் ஆரம்பக் கட்டத்தில் நியமிக்கப்படுகிறார்கள். உயர்நீதிமன்றம் கோருகிற அவ்வளவு பேரையும் நியமிப்பதற்குத் தடையாக இருப்பது நிதி தான். நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை அவ்வப்போது எடுக்கப் பட்டு வருகிறது.

THIRU T. VENKATA REDDY: Mr. Speaker, Sir, the new Courts are without furniture and other facilities. Most of the lawyers and all the im because of non availability of furniture. Will the Government think of providing furniture and other facilities in the Courts urgently

THE HON. THIRU C. PONNAIYAN: Hon Speaker, Sir this plight has been there for the past 35 years. This Government is taking all efforts to mitigate these difficulties.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கின்றது. ஒரே ஒரு மாவட்ட நீதிமன்றம் திருநெல்வேலியில் இருப்பதால் வழக்குகளை விரைவிலே பைசல் செய்ய முடியவில்லை. எனவே தூத்துக்குடியிலாவது அல்லது திருச்செந்தூரிலாவது மேலும் ஒரு நீதிமன்றத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே இருக்கின்ற இந்த தேவையை அரசு கருத்தில் கொண்டு, தூத்துக்குடியில் ஒரு மாவட்ட நீதிமன்றத்தை அமைப்பதை கருத்தில் கொண்டு பரிசீலித்து வருகிறது.

பெருந்துறை ஒன்றியத்திலிள்ள திங்களூருக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 129—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை ஒன்றியம் திங்களூரில் குடிதண்ணீர் வழங்கப்படாதது குறித்து 6–6–1980 ல் போராட்டம் நடத்தியதை தொடர்ந்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

(ஆ) அம் மக்களுக்கு குடிதண்ணீர் எப்போது கிடைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) கொளப்பளூர், சிறுவளூர், குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளி பஆகிய பேரூராட்சிகளின் (திங்களூர் கிராமம் உட்பட) கூட்டு

[மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்] [1983 பிப்ரவரி 4

குடிநீர் திட்டத்திற்கான ஆய்வு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம், வாரியத்தின் ஒப்புதல் பெற்று அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டதும் பரிசீலனை செய்து ஒப்புதலுக்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய எண் 5043. இதே பக்கத்தில் 11569 ஆம் எண்ணுள்ள கேள்வியும் வந்திருக்கின்றது. கொடுக்கப்படுகின்ற கேள்வி, அந்தந்த பகுதியிலே உள்ள சில அவசரமான தேவைகளைக் கருதிதான் கொடுக்கப்படுகின்றது. இப்போது அதிகமான காலம் வீணாகிப் போய்விட்டது. அடுத்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சம்பவத்தைப் பொருத்தவரையிலும் போன ஆண்டே பெருந்துரை ஊராட்சி, ஊத்துக்குளி ஊராட்சிகளில், எந்தெந்த ஊர்களிலே தண்ணீர் வேண்டும் என்று கேட்டு அந்த லிஸ்டும் அனுப்பப்பட்டிருக்கிறது. அது மீண்டும் எந்தக் காலம் வரையில் பரிசீலனையில் இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திங்களூரில் ஒரு மேல்நிலைத் தொட்டியோடு கூடிய கிணறு, மற்றும் ஆழ்துளைக் கிணறு மூலம் தண்ணீர் கிடைக்கிறது. தற்போதுள்ள வறட்சியின் காரணமாக மேலும் ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து 25-7-1981 முதல் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் ரூ. 334.32 லட்சம் செலவில் கொளப்பலூர், சிறுவலூர், குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளி ஆகிய பேரூராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம், திங்களூரையும் சேர்த்து போடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் ஆய்வு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளருக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் பெரியார் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திங்களூரைப் பொறுத்த வரையிலும் 3 ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றிலே தண்ணீர் இல்லை. 2 ஆழ்துளை கிணறுகளில் தான் தற்சமயம் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இருப்பினும் ஏற்கனவே இருக்கக்கூடிய அந்த மேல்நிலைத் தொட்டியும் வீடுகளுக்கு விநியோகம் செய்து கொண்டிருந்த அந்த முழு பைப்பும் பழுதடைந்த காரணத்தினால் அந்த மேல்நிலைத் தொட்டியில் தண்ணீர் ஏற்றி விநியோகம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அதை உடனடியாக குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலனை செய்து பழுது பார்க்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1983 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தால் நான் 'ட்வாட் போர்டு' எம்.டி.க்கோ அல்லது இன்ஜினியருக்கோ அனுப்பி ஆவன செய்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தை இரண்டு ஆண்டுகளாக ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அதனுடைய மதிப்பீட்டுத் தொகை என்ன? எந்த ஆண்டு அது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 334.32 லட்சம் என்று ஏற்கனவே சொன்னேன். கொஞ்சம் அதிகமான காலம் ஆகிறது என்றால், ஆழமாக பரிசீலனை செய்கிறோம் என்று பொருள்.

இளையான்குடி குடிநீர் திட்டம்.

*வினா எண் 130—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி குடிநீர் திட்ட மதிப்பீடு மாற்றி அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) இளையான்குடி பேரூராட்சி மற்றும் ஜாகிர் உசேன் கல்லூரி வரையிலுள்ள கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்காக 54.80 லட்சம் செலவில் ஒரு திட்டத்திற்கு ஆகஸ்டு 82ல் அரசு நிர்வாக அனுமதி அளித்தது. 1979-80 ம் ஆண்டின் நிலையப் பட்டியல் வீதத்தில் திட்டம் போடப்பட்டதால் தற்போதைய நிலைகளின் படி மதிப்பீட்டை திருத்தி அமைக்க வேண்டி இருக்கிறது. திருத்திய மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடி குடிநீர் திட்டத்தோடு 16 கிராமங்களுக்கு குடிநீர் கொடுப்பதாகவும், அதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. எந்த எந்த கிராமங்கள் என்று பெயர்களைச் சொல்ல முடியுமா? அதோடு ஏன் இவ்வளவு நாள் தாமதித்து இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.